# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044302

1. District : கரூர் / மாவட்டம் — PS: V&AC / காவல்நிலையம் — Year: 2021 / ஆண்டு — FIR No.: 08/AC/2021 / மு.த.அ. எண் — Date: 23/11/21 / நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018 — Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : 22/11/21 நாள் முதல் — Date to : மற்றும் 23.11.21 நாள் வரை
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23/11/21 — Time நேரம் : 11.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23/11/21 — Time நேரம் : 11.00 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமான புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 20 Km மேற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி க.பரமத்தி வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு.E.சக்திவேல்
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
   (b) Father's/ Husband's Name : எ.சிவரன்
   தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ரியல் எஸ்டேட்
   (g) Address : முகவரி 1/2- பாரதிதாசன் நகர், தான்தோன்றிமலை(P), கரூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. R. குமரவேல், க.பரமத்தி வட்டார வளர்ச்சி அலுவலர், [கிராம ஊராட்சி], கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/11/2021 23/11/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23/11/21 @ 15.00 hrs.

Name: பெயர் C. சரவணதுரை
Rank: நிலை ... No. ... ஆய்வாளர்,
உ.த.க. பிரிவு, கரூர்
23/11/21.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.8/AC/2021 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் சால்வன்துரை ஆகிய நான் 23.11.2021ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது திரு.E.சக்திவேல் வயது 46/21, த/பெ.திரு.ஈஸ்வரன், கதவு எண்.1/2, பாரதிதாசன் நகர், தான்தோன்றிமலை அஞ்சல், கரூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர்:- E.சக்திவேல், வயது 46/21, த/பெ.திரு.ஈஸ்வரன், கதவு எண்.1/2, பாரதிதாசன் நகர், தான்தோன்றிமலை அஞ்சல், கரூர் மாவட்டம், கரூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கரூர் மாவட்டம், கரூர். அய்யா, நான் மேற்படி முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனது மனைவி திருமதி.P.செந்தில்ராணி பெயரில் கரூர் மாவட்டம், புகளூர் தாலுகா, க.பரமத்தி கிராம சர்வே எண்.419/Bல் 2.22 ஏக்கர் பரப்பளவில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட 61 காலி வீட்டு மனைகளில் 56 விற்பனையாகாமல் இருந்தது. அந்த மனைகளை வரன்முறைபடுத்த மனு கொடுத்ததன் அடிப்படையில் ந.க.எண்.500/2021/க.மா, நாள்.28.04.2021-ன்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் மாவட்டம் அவர்கள் பூங்கா ஒதுக்கீடு போக 52 மனை பிரிவுகளுக்கு கொள்கை அளவிலான வரன்முறை ஒப்புதல் வழங்கினார். அதற்கு நான் கிரீன் சிட்டி என்று பெயர் வைத்துள்ளேன். அதனடிப்படையில் 22 மனைகளை மட்டும் வரன்முறைப்படுத்த க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலருக்கு கடந்த 30.07.2021 மற்றும் 12.08.2021 ஆகிய தேதிகளில் மனுக்கள் கொடுத்ததன் அடிப்படையில் ந.க.ஆ6/3188/2019, நாள்.19.08.2021ன்படி மனை எண்கள்.9, 10, 19, 20, 21, 22, 23, 24, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 47, 48, 49, 50, 51 மற்றும் 52-க்கு வீட்டுமனை வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்பட்டது. அதுபோல, மேலும் 10 மனைகளை வரன்முறைப்படுத்த க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலருக்கு கடந்த 15.09.2021ஆம் தேதி மனு கொடுத்ததன் அடிப்படையில் ந.க.ஆ6/3188/2019, நாள்.04.10.2021ன்படி மனை எண்கள் 15, 16, 27, 28, 29, 30, 39, 40, 41 மற்றும் 42-க்கு வீட்டுமனை வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவிற்காக க.பரமத்தி கிராம ஊராட்சி BDO திரு.குமரவேல் அவர்களை சந்தித்தபோது, அவர் என்னிடம் என்ன ஒன்றும் கவனிப்பு இல்லையா என்று கேட்டார். நான் பிளாட் விற்பனை கம்மியாக உள்ளது என்றேன். அதற்கு அவர் அடுத்தமுறை மீதி மனைகளுக்கு மனு கொடுக்கும்போது என்னை கவனிக்கவேண்டும் என்று சொல்லி அனுப்பினார். தற்போது மேலும், 4 வீட்டு மனை எண்கள்.44, 45, 46 மற்றும் 53 மனைகளுக்கும் வரன்முறைப்படுத்த க.பரமத்தி

23/11/21

ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு.ஆர்.குமரவேல் அவர்களிடம் அவரது அலுவலகத்தில் வைத்து 19.11.2021 அன்று எனது மனைவி திரு.P.செந்தில்ராணி பெயரில் மாலை சுமார் 4 மணியளவில் மனு கொடுத்தேன். அப்போது அவர் மனை வரன்முறைப்படுத்தும் கட்டணத்தை ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் கட்டிவிட்டு வரும்படி கூறினார். அதன்படி நான் 22.11.2021ஆம் தேதி சலான் நம்பர் 20211122830854-ன்படி ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, கரூர் கிளையில் ரூ.10,260/- செலுத்தி அதற்கான இ-சலானை பெற்று நேற்றே மாலை சுமார் 6 மணியளவில் அவரிடம் கொடுத்தேன். அவர் அதை வாங்கி வைத்துக் கொண்டு, என்னிடம் ஏற்கனவே சும்மா வேலையை முடிச்சிட்ட, பழசுக்கும் சேர்த்து ஒரு மனைக்கு 10 ஆயிரம் கொடுக்கனும் என்றார். அதற்கு நான் தொகை அதிகமாக இருக்கிறது என்றபோது, அவர் எல்லாத்துக்கும் சேர்த்து 1,25,000 கொடுத்திரு வேலையை முடிச்சிடலாம் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன்பிறகு நான் வீட்டிற்கு வந்தவுடன் திரு.குமரவேல் அவர்கள் அவரது செல்போன் எண்.7904468166-லிருந்து என்னுடைய செல்போன் எண்.9994353247க்கு மிஸ்டு கால் விட்டிருந்தார். அதனடிப்படையில் நான் நேற்று இரவு சுமார் 8.25 மணிக்கு அவரை கூப்பிட்டேன். அவர் காலைல பணத்துடன் வந்திருவியா என்று என்னிடம் கேட்டார். நான் முயற்சி செய்கிறேன் என்றேன். அதன்பிறகு இன்று காலை சுமார் 7.15 மணிக்கு மீண்டும் மிஸ்டு கால் விட்டார். நான் சுமார் 9.20 மணிக்கு அவரை கூப்பிட்டேன். அப்போதும் அவர் என்னிடம் 11.00 மணிக்கு 1.25 லட்சம் பணத்தோட வந்திரு என்றார். நான் முயற்சி செய்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் 11 மணிக்கு நான் எதிர்பார்ப்பேன் என்றார். நான் அவரிடம் பணம் குறைவாக 25 ஆயிரம்தான் உள்ளது என்று சொன்னேன். அப்போது அவர் அதை முதலில் வந்துகொடு பைலை மூவ் பண்றேன் என்று சொன்னார். நான் வேறுவழியில்லாமல் சரியென்று கூறிவிட்டு போனை வைத்துவிட்டேன். யோசித்து பார்த்ததில், எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத காரணத்தால், வீட்டு மனையை மனை வரன்முறைப்படுத்த லஞ்சம் கேட்ட க.பரமத்தி வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு.ஆர்.குமாரவேல் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/- XXXXXXXXXX (E.சக்திவேல்) 23/11/2021.

Sir, Received the complaint on 23.11.2021 at 11.00 hrs,. A confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and reputation of the accused was found to be bad. Also verified the demand of bribe by the accused through mobile phone from the complainant in loud speaker mode at or about 11.12 hrs. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.08/AC/2021 u/s 7(a) of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 11.30 hrs on 23.11.2021. Sd/- (xxxxxxxx) 23.11.2021 C.Salvan Thurai, Inspector of Police, V&AC, Karur.

23/11/21

Original FIR along with the original written complaint of Tr.E.Sakthivel, S/o.Eswaran, Door No.1/2, Bharathithasan Nagar, Thanthontrimalai Post, Karur District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

23/11/21

(C.Salvanthurai)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.